செ. கு. எண்: 344 நாள் :29.12.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 29.12.2013

கடலூர் நகரம், கடலூர் - நெல்லிக்குப்பம் சாலையில் 19.11.2013 அன்று நடந்து சென்று கொண்டிருந்த செம்மண்டலம் பகுதியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் சரவணன்;

சென்னை, தலைமைச் செயலகம் அருகே 28.11.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த தண்டையார்பேட்டையைச் சேர்ந்த திரு. தட்சிணாமூர்த்தி;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கரியமாணிக்கம் மேற்கு கிராமம் அருகே 2.12.2013 அன்று வேனில் பயணம் செய்த தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் சேகர்;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஜானகிபுரம் கிராமம் அருகே 9.12.2013 அன்று நடந்து சென்று கொண்டிருந்த அத்திமானம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பன் என்பவரின் மகன் கன்னியப்பன்;

சென்னை, ஐ.சி.எப் பேருந்து நிறுத்தம் அருகே கொன்னூர் நெடுஞ்சாலையில் 12.12.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த வில்லிவாக்கத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மகன் கார்த்திகேயன்;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கள்ளிமந்தயம் கிராமம் அருகே ஒட்டன்சத்திரம் - தாராபுரம் சாலையில் 13.12.2013 அன்று காரில் பயணம் செய்த கோயம்புத்தூர் நகரைச் சேர்ந்த திரு. நாச்சியப்பன்; இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கள்ளிமந்தயம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வேலுச்சாமி என்பவரின் மகன் திரு. வெள்ளைசாமி;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், ஆவணிப்பூர் கிராமத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கலந்து கொள்ள சென்ற ஆவணிப்பூர் ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வாளர் திரு. ராமன் மற்றும் அண்டப்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் திருமதி கற்பகம் ஆகிய இருவரும் திண்டிவனம் வட்டம், சென்னை – விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் 10.12.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கீழக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமன் என்பவரின் மகன் ஜெயராமன் 13.12.2013 அன்று பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது, சின்னாளப்பட்டி பிரிவு சாலை அருகே பேருந்திலிருந்து தவறி கீழே விழுந்து பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9